LAMB'S TALES FROM SHAKESPEARE.

# AS YOU LIKE IT.

TRANSLATED INTO TAMIL

BY

T. SARAVANA MUTTU, B. A.,

*Librarian, Presidency College, Madras.*

Madras:

PUBLISHED BY THE MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY

OLD COLLEGE, NUNGUMBAKAM

1893.



# "உன் விருப்பம்போல்"

## அல்லது

# ராசலிண்ட் சரித்திரம்.

பிராஞ்சுதேசம் பலநாடுகளாக அல்லது சிற்றிராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த காலத்திலே அந்நாடுகளிலொன்றை அதற்குநியாயமாய்ப்பட்டத்துக்குரிய தன் றமயனை நீக்கி யூரினின்றுந் துரத்திவிட்டு, ஒருவன் அரசாண்டு வந்தான்.

தன் இராச்சியத்தினின்றுந் துரத்தப்பட்ட அரசன் தன்னிடத்து அன்பு நீங்காத சிலருடன் ஆர்டன் என்னும் வனத்திற்குச் சென்று அங்கே தமது நிலத்தையும் வருமானத்தையும் அவ்விராச்சியத்தை வலிதிற்கைக்கொண்டவன் அனுபவிக்கும்படி தாமே தன் பொருட்டுத் துறந்து வந்த சில நண்பர்களோடு

வாழ்ந்தான். இராச சபையிலே சென்ற கவலை நிறைந்த ஆடம்பரமான வாழ்வைப்பார்க்கிலும் இக் காட்டிலே கழியுங் கவலையற்ற வாழ்வானது அவர்களுக்குச் சிலநாட் பழகவேமிகவும் இன்பமுள்ளவாழ்வாக இருந்தது. அங்கே யவர்கள் அங்கிலேய தேயத்துப் பழைய ராபின் ஹூட்(Robin Hood)எனபவன் போல வசித்துவந்தாாகள். அக்காட்டிற்கு வேத்தவையினின்றும அநேக சிறந்த வாலிபர் நாடோறும வநது துன்பமற்ற "ஆடககால" த்தில் வசித்தோரா போலக் கவலையின்றிக் காலம்போக்கினார்கள். கோடைகாலத்திலே காட்டு மான்கள் துள்ளி விளையாடுவதைப் பார்த்துக்கொண்டு பெரிய காட்டு மரங்களின் நல்ல நிழலிலே படுத்திருப்பார்கள். அக் காட்டில் வாழுங் குடிகளைப்போல அவர்களுக்குத் தோற்றின இப் புள்ளிமான்கள்மேல் அவர்கள் மிகவும் அன்பு வைத்தமையால் அவற்றைக்கொன்று அவற்றின் இறைச்சியினால் தமக்கு உணவு செய்துகொள்ள வருந்தினார்கள். மாரிகாலத்திலே குளிர காற்று அவ்வரசனை தனது போகூழினால் வந்த மாறுதலை உணரும்படி செய்தபொழுது அவனதைப் பொறுதியுடன் தாங்கிக்கொணடு "என்னுடம்பின் மேல்வீசுங் குளிர்ந்தகாற்றுக்கள் எனக்கு உண்மையான மந்திரிகள். அவை என்னைப் புகழாது என்னிலைமையை உள்ளபடி காட்டுகின்றன. அவை சுறுக்கென உறைப்பினும் அவற்றின் பற்களோ இ

க்கமின்மை, நன்றி மறத்தல் என்பவைகளின் பற்க ளைப்போற்கூரியவலல. வறுமையை மனிதரெப்படி இழித்துப்பேசினும், அதினிடத்துப் புல்லிய நச்சுப பாம்பின்தலையிலிருந்தெடுக்கப்பட்ட மருந்திற்கின்றி யமையாத இரத்தினத்தைப்போல நாமடையும் நன் மை சில வுண்டு" என்று சொல்வான். இவ்விதமாக அப்பொறுதியுடைய அரசன் தன்கண்ணிற் கெதிர்ப படு மொவ்வொரு பொருளிலும் ஒவ்வோர் நன்மை காண்பான். இந்த நன்மையறியுந் தன்மையினால மக்கள் கூட்டுறவிலலாத தன்னுடைய தனித்த வா ழ்வின் கண்ணே அவன் மரங்களிலே நாவையும, ஓடு மருவிகளிலே புஸ்தகத்தையும், கற்களிலே உப தேசத்தையும், எப்பொருளிலும் நன்மையையுங் க ண்டு கொண்டான்.

நாட்டை விட்டுத் துரத்தப்பட்ட அவ்வரசற் கு ராசலிண்ட் என்னும் ஒரே பெண்ணிருந்தனள். பிரடெரிக் என்னும் அரசன் அவடந்தையைநா ட்டை விட்டுத் துரத்தினுையினும் அவளைத் தனது ஒரே புதல்வியாகிய சீலியா என்பவட் குத் தோழியாக அரண்மனையிலே மறித்து வைத் துக்கொண்டான். இவ்விரு பெண்களுக்கு மிடை யே தங்கள் தந்தை மாருக்கிருக்கும் பிரிய வினைத் தினுற் சிறிதுங் கெடாத அந்நியோந்நிய சிநேக முண்டாயிருந்தது. சீலியா தன் தந்தை ராச

லிண்டின் தநதையை நாட்டை விட்டுத் துரத்தியை திஞல் ராசலிண்டுக்குச் செய்த தீங்குக்கெல்லாம தக்க கைமாறளிக்கத் தன்ஞற் கூடிய வளவு முய ன்றனள். தன் தகப்பன் நாட்டைவிட்டுத் துரத் தப்பட்டதை யாவது தான் இக்கொடுங்கோன் மன் னற் கடங்கி யிருப்பதை யாவது ராசலிண்ட் நினை த்துத் துக்கம்படுங் காலத்து அவட்குத் தைரியஞ் சொல்லித் தேற்றுவதே சீலியாவின் முழு எண்ணமு மாயிருந்தது.

ஒருநாள் சீலியா வழக்கம்போல ராசலிண்டைப பார்த்து "ராசலிண்டே, என்னருமைச் சகோ தரியே, சந்தோஷமாயிரு" எனச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது அரசனிடத் திருந்தோர் தூதன் வந்து, அப்பொழுது ஒரு மல்யுத்தம் தொட ங்கப் போகிறதாயும், அதைப் பார்க்கப் பிரிய மிருந் தால் உடனே அவர்கள் அரண்மனைக் கெதிரிலிருக் கும் கொலு மண்டபத்திற்குச் செல்ல வேண்டு மென்றுஞ் சொன்ஞன். சீலியாவும் அது ராச லிண்டுக்கோர் பொழுது போக்காக இருக்குமென வெண்ணிப் போக வுடன்பட்டனள். அக்காலத் திலேயோ அரண்மனைகளில் அழகிய பெண்களுக் கும் இராஜ ஸ்திரீகளுக்கும் முன்னே சாதாரண மாய் மல்யுத்தஞ் செய்வதுண்டு. இந்த மல்யுத்தம் பார்ப்பதற்குச் சீலியாவும் ராசலிண்டும் போயினர் கள். அங்கே மல்யுத்தம் மிகவுந் துக்கமாய் முடியும்

யோயிருந்தது. மல்யுத்தத்திற் பலநாட் பழகிய வனும், பலரைக் கொன்றவனுமாகிய ஒரு பெரிய வலியவீரன் ஒரு சிறு வாலிபனேடு யுத்தஞ் செய் யப் போகிறதா யிருந்தது. அவ் வாலிபனது இள மையையும் பழக்க மின்மையையும நோக்கிக் கண டோரெலலாம அவன் சந்தேக மின்றி இறப்பா னெனக் கருதினா.

அரசன் சீலியாவையும் ராசலிண்டையுங் கண்ட பொழுது “ஆகா, மகளே, அண்ணன்மகளே, மல்யு த்தம்பார்க்க வந்தீர்களா ? வீரர் இணையின்றி இருப்ப தினுல் அதிலுங்களுக்கின்பமிராது. இவ்வாலிபன்மே லிருக்குமிரக்கத்தினுல் அவனை மல்யுத்தத்தினின்றுந் தடுக்க விரும்புகிறேன். உங்களாற்றடுக்க முடியுமா வென அவனிடத்துப் பேசிப்பாருங்கள்” என்ருன். இந்த மனுத் தன்மையான காரியத்தைச் செய்வ தற்கு அப்பெண்களுக்கு மிகவும் விருப்பமா யிருந் தது. முதன் முதல் சீலியா அவ்வாலிபனை அம் முயற்சியை விட்டு நீங்கும்படி வேண்டிக் கொணட னள். அதன்மேல் ராசலிண்ட் பேசினுள். அவ னுக்கு வரக்கூடிய தீங்கைப்பற்றி மிகவும் மனவுருக் கத்தோடும் பட்சத்தோடு மவள் பேசினதைப் பார க்கவே அவனுக்கு அவளது மிருதுவான வார்த்தை யினுற் றன்முயற்சியினின்று மெடுபடாது அவளது அழகிய கண்கள் முன்னேயே தன் வீரத்தைக் காட்ட வேண்டுமென்னும் விருப்ப முண்டாயிற்று.

சீலியா ராசலிண்ட் இவர்களினது வேண்டுகோளை அவன் மிகவும் கோர்த்தியாயு மடக்கமாயு மறுத்துச் சொலலியதைப் பார்க்கவே அவாகளுக்கு அவன் மேற்பற்று அதிகமாயிற்று. அவன் மறுத்துச் சொலலிப் பின் வருமாறு முடித்தனன். "இவ்வளவு அழகுஞ் சிறப்புமுடைய பெண்கள் கேட்பனவற்றை மறுக்க வெனக்கு மிகவுந் துக்கமாயிருக்கின்றது: ஆயினும் உங்களதழகிய கணகளும் நலலெண்ணங்களு மெனக்குத் துணையாக வரட்டும். நான் தோற்முல் சிறிதுங் கருணையில்லா வொருவனுய் அவமானப் படுகின்றேன். நானிறந்தாலோ இறக்கப் பிரியமுள்ளவனு யிறக்கின்றேன். யானிறந்தாலழச் சிநேகர் யாரு மின்மையால் அவர்கள் யாருக்கும் யான் தீங்கு செய்யவிலலே. உலகத்திலெனக்குரியது யாது மின்மையால் உலகத்திற்கு யான் தீங்கு செய்யவில்லே. இவ்வுலகத்தில் யான் பிடித்திருக்கு மிடத்தை யொழித்து விட்டால் அதற்குத் தகுந்தோர் வேறு யாராவது வரலாம்",

அப்பான் மல்யுத்தந் தொடங்கிற்று. அவ்வாலிபனுக்கு யாதொரு தீங்கும் வரக் கூடாதெனச் சீலியா பிரார்த்தித்தனள். ஆயின் அவற்காக மிகவும்பரிதபித்தவள் ராசலிண்டே. உலகத்திலே தனக்கு ஆருமில்லே யென்றும் தானிறக்க விரும்புவதாகவும் அவன் கூறியது தன்னேப்போலவே அவனுந் துர்ப்பாக்கியனென்று ராசலிண்டை நினைக்கச் செய்தது.

அவன்மேல் அவளிரங்கியதையும் அவன்யுத்தஞ்செய்யும்பொழுது அவனுக்குத் தீங்கெங்கே நேரிடுமோவென ஏக்குற்றிருந்ததையும் நோக்கின் அவள் அந்நேரமே அவன்மேற் காதல் கொண்டதாகக் கூறலாம். இந்த அழகும் மேன்மையுமுடைய பெண்களினுற் காட்டப்பட்ட பட்சமானது அவ்வாலிபற்குத் தைரியமும் பலமுங்கொடுத்து அவனை ஆச்சரியமான காரியங்களெல்லாஞ் செய்யச்செய்தது. அவன் முடிவில் தன்னெதிரியை முற்றும் வென்றனன். எதிரியோ தான் பட்ட காயத்தால் சிறிது நேரம் பேச அசைய முடியாது கிடந்தனன்.

அந்த வாலிபனுற் காட்டப்பட்ட தைரியத்தையுங் கெட்டித் தனத்தையும் பார்த்து பிரடெரிக் கரசன் மிகவுமனமகிழ்ந்து அவனைத் தனக்குக் கீழே வைத்துக்கொள்ள விரும்பி அவனது பெயரையுங் குலத்தையும் வினவினன். அதற்கவன் தன்பெயர் ஆர்லாண்டோ வென்றும் தான் சார் ரவ்லாண்ட் பாய்ஸ் என்பவருடைய இளைய மகனென்றுங் கூறினன். ஆர்லாண்டோவின் தந்தையாகிய ஸார் ரவ்லாண்ட் பாய்ஸ் இறந்து சில வருடங்கழிந்தன. ஆனால் அவருயிருடனிருக்கையில் இப்பொழுது நாட்டினின்றுந் துரத்தப்பட்டிருக்கு மரசனுக்கு மிகவும் பயபக்தியுள்ள பிரசையும் நல்ல சினேகனுமாயிருந்தனர். ஆகையால் ஆர்லாண்டோ நாட்டைவிட்டுத் துரத்தப்பட்ட தன் சகோதரனது சினேகன்

மகன் எனப பிரடெரிக் கேள்விப்பட்ட உடனே அவன்மே லிருந்த பிரியமெல்லாம் பிரிய வீனமாய் அவ்விடத்தைவிட்டு மனவருத்தத்துடன் போனான். தன் சகோதரனது சிநேகரின் பெயரையுங் கேட்க வெறுப்புற்றிருந்தபோதிலும் அவ்வாலிபனது வீரத் தைப்பார்த்துஆச்சரியப்பட்டு, ஆர்லாண்டோ வேறு யாராவ தொருவரது புத்திரனு யிருந்தானில்லையே, எனத் தான் போகும்பொழுது நினைத்துத் துக்கப் பட்டான்.

தனது புது நண்பன் தன் தந்தையின் பழைய நண்பனது மகனெனக் கேட்கவே ராசலிண்டுக்கு மிகவு மானந்த முண்டாயிற்று.

அவள் சீலியாவைப்பார்த்து "எனது தந்தை சார் ரவ்லாண்ட் பாய்ஸ் மேல் மிகவும் பட்சம் வைத் திருந்தனர். இவ்வாலிபன் அவரது மகனென யான் முன்னமே அறிந்திருந்தால் யுத்தஞ் செய்யவேண் டாமென்று தொடங்க முன்னமே அழுதகண்ணீ ரோடு வேண்டிக்கொண்டிருப்பேன்" என்றனள். அப்பெண்கள் அவனிடத்துச் சென்று அரசனுக்குச் சடிதியாய் வந்த பிரிய வீனத்தான் மனங்கலங்கி நிற்குமவனை மென்சொற்கொடு தேற்றினர். பிறகு திரும்பிப் போகும் பொழுது தன் தந்தையின் ப ழைய நண்பனது வலிமையுடைய மகனாகிய வாலிட னுக்குச் சில ஆசார வார்த்தை சொல்லத் திரும்பின

ராசலிண்ட் தன் கழுத்திலிருந்த ஒரு சங்கிலியை எடுத்துக் கொடுத்து "எனக்காக இதை அணிந்துகொள்ளும். யான் இப்பொழுது துர்ப்பாக்கியவதியா யிருக்கின்றேன். அல்லது போனால் இதினின்றும் விலையுள்ள தோர் வெகுமதி யளிப்பேன்." என்றனள். அப்பெணகள் தனியாயிருந்த பொழுது ராசலிண்ட் இன்னும் ஆூலாண்டோவைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்து, அந்த அழகிய வாலிபன்மேற் றன் சகோதரி காதல் கொண்டனளெனவறிந்த சீலியா ராசலிண்டைப் பார்த்து "இவ்வளவு சடிதியாகக் காதல் கொள்ள உன்னாலமுடியுமா" என்றனள். அதற்கு ராசலிண்ட் "என் தந்தை அவரது தந்தைமேற் பட்சம் வைத்திருந்தனர்". என்றனள். அதற்குச் சீலியா "அதனலவரது மகனை நீ காதலிக்க வேண்டுமென எப்படி வரும். அப்படியானால் என் தந்தை அவரை வெறுத்தமையால் அவரை யான் வெறுக்க வேண்டுமே. அப்படியான் வெறுக்க வில்லையே" யென்றனள்.

சார் ரவ்லாண்ட் பாய்ஸ் என்பவரின் மகனைக் கண்டவுடனே ஊரைவிட்டுத் துரத்தப்பட்ட அரசனுக்குச் சிநேகர் பிரபுக்களி லநேக ரிருக்கின்றாரென்பதை நினைத்து அரசன் கோபத்தோடிருந்தமையாலும், தனது தமயன்மகளை ஊரார் அவளது நற்குணங்களுக்காகப் புகழ்ந்து அவளது தந்தையினிலைமைக்காக இரங்குவதையுமறிந்து அவள்மேற்

சில காலம் பிரிய மில்லா திருந்தமையாலும், அப சனுக்கு அவள் மேற் கோபஞ் சடிதியாய் மூண்டது. சீலியாவும் ராசலிண்டும் ஆர்லாண்டோ வைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது பிரடெரிக் அறைக்குள்வந்து ராசலிண்டை அந்தக்ஷணமே அரண் மனையை விட்டுச் சென்று நாட்டை விட்டுத் துரத்தப்பட்ட தன் தந்தையைப் போய்ச் சேரு மபடி கோபத்தோடு கட்டளையிட்டு, அவளுக்காகப் பேசிய சீலியாவைப் பார்த்து அவளுக்காகவே தான் ராசலிணடை அதுகாறு மங்கிருக்க விட்டதாகக் கூறினான். அதற்குச் சீலியா "அப்பொழுது யானவளது மகிமையை அறியச்சக்தியற்ற சிறியவளாயிருந்தமையால் அவளை இங்கே இருக்க விடும்படி யான் கேட்கவில்லை. இதுகாறு முடன் றுயின்று, உடனெழுந்து, உடன் கற்று, உடனுடி, உடனுண்டிருந்தமையா லவளது மகிமையை யானறிவேன். அவளை நீங்கி யானிரேன்" என்றனள். அதற்கு பிரடெரிக் "அவளதிகஞ் சூதுள்ளவள். அவளது பசாரத்தையும், மௌனத்தையும், பொறுமையையும் பார்த்து ஊராரெல்லா மிரங்கு கிறார்கள். அவளுக்காகப் பேசுவதால் நீயுன் பேதைமையைக்காட்டுகிறாய். அவள் போய் விட்டால் நீ மிகவும் அழகுள்ள வளாயும் நற்குண முள்ளவளாயுந் தோற்றப் படுவாய். ஆகையா லவளுக்காகப் பேச வாய் திறவாதே. அவள்மேல் யான் சொன்ன தீர்ப்பு மாற்ற முடியாது" என்றனன்.

ராசலிண்டைத் தன்னோடிருக்க விடும்படி தகப்ப னை வசப்படுத்த முடியாதெனச் சீலியா கண்டவுட னே, தயாள குணத்தோடு தானுமவளோடு போ கத் தீர்மானித்து, அன்றிரவே தன் தகப்ப னரண மனையை விட்டுச் சென்று ராசலிண்டுடன் ராசலி ண்டின் தந்தையாகிய நாட்டைவிட்டுத் துரத்தப் பட்ட அரசனை ஆர்டன் என்னுங் காட்டிற் காணும படி சென்றனள். புறப்படுமுன்னே சீலியா தாங் களப்பொழு தணிந்திருக்கும் விலையுயர்ந்த வஸ்தி ரங்களுடன் இரண்டிளம் பெண்கள் பிரயாணஞ் செய்வது சேம மற்றதெனக்கருதித் தாங்கள் நாட்டுப் புறத்துப் பெண்களைப்போலத் தமது குலத்தை ம றைத் துடுத்துக்கொண்டு போகவேண்டுமெனக் கூ றினள். இருவரி லொருவர் ஆண்மகனைப்போல வு டுத்திருந்தா லின்னுஞ் சேமமா யிருக்குமென ராச லிண்ட் கூறினள். இருவரிலும் ராசலிண்ட் உயரமு ள்ளவளானபடியால் அவளே யொரு நாட்டுப் புற த்து வாலிபனைப்போல உடுத்துக்கொள்ள வேண்டு மென்றும், சீலியா ஒரு நாட்டுப்புறத்துப் பெண் ணைப்போல உடுத்துக்கொள்ள வேண்டு மென்றும், இருவரும் தமையன் தங்கை யெனச் செல்லவேண் டுமென்றும் உடனே யுடன்பட்டுக் கொண்டார்கள். ராசலிண்ட் தன்னைக் கானிமீட் என்று கூற வேண்டுமென விரும்பினள். சீலியாவும் அலீனு வென்னும் பெயரை வகித்துக் கொண்டனள். இந்த

மாறுவேஷத்துடன், தங்களது பணத்தையு மாபரணங்களையும் வழிச் செலவுக்காக எடுத்துக்கொண்டு, அந்த அழகிய இராச குமாரத்திகள் இருவரும தமது நெடும்பிரயாணத்திற்குப் புறப்பட்டனர். ஏனெனில் ஆர்டன் காடு அவ்வரசனது நாட்டெல்லையிலிருந்து வெகு தூரத்திலிருந்தது.

ராசலிண் டென்னும் பெண் (இப்பொழுதவளைக் கானிமீட்டென்று கூற வேண்டும்) தான் ஆண மக்களினுடுப்பை யணிந்தவுடனே ஆண மக்களின் தைரியத்தையு மணிநதவள்போற் றோற்றினள். ராசலிண்டை யநேக கற்றூரம் தொடாநது வந்ததில் சீலியா காட்டிய மெய்யன் பிற்கு மாற்றுப காரஞ் செய்வதற்காக அவளது புதுச் சகோதரன், அலீஞ வென்னும் நாட்டுப்புறக் கன்னியின் கபட மற்ற வீரத்தன முள்ள சகோதரனாகிய கானிமீட் தானே யானது போலச் சந்தோஷமா யிருக்க முயன்றனன். கடைசியில் அவர்களார்டன் காட்டிற்கு வநத பொழுது இது காறும் வழியிற்றூம் சந்தித்த சுகமான மடங்களும மற்றும் வேண்டிய சாமான்களு மகப்படாது போகவே பசியுங களையும் மேம்பட்டு இது காறும் வழி வழியே பேசி விளையாடிக் கொண்டு தன் சகோதரியைச் சந்தோஷமாகக் கூட்டிக் கொண்டு வந்த கானிமீட் இப்பொழுது அலீஞ விடத்துத் தான் மிகவுங் களை

த்திருப்பதாயும் தான் அணிந்திருக்கும் ஆண் மகனு டையையுங் கவனியாது பெண்போல அழும் பக்கு வத்தில் இருப்பதாகவும் கூறினன். அலீனுவுந் தன் னுல் அதன்மேல் நடக்க முடியாது என்றனள். பிற கு கானிமீட் இளகிய மனதையுடைய பெண்களைத் தைரியஞ் சொல்லிக் காப்பாற்ற வேண்டியது ஆண் மகன் கடமையெனக் கருதித் தன் புதுச்சகோதரிக் குத் தான்தைரியவானென்றுகாண்பிப்பான் "என் தங்கை அலீனுவே அதைரியப்படாதே. நமது பிர் யாணம் முடிந்தது. ஆர்டன் காட்டுக்கு வந்து விட்டேம்" என்றனன். ஆனுல் போலியாண்மை யும் போலித் தைரியமும அதன்மேல் அவர்க்குத் துணை நில்லா. ஏனெனில் ஆர்டன் காட்டை அடைநத போதிலும் அங்கே அரசன் எங்கிருப்பா னென அறிந்தோரல்லர். இந்தப் பெண்களினது பிரயாணம் மிகவுந் துக்கமாய் முடிந்திருக்கலாம். அவர்கள்வழிதெரியாமல் அலைந்து உணவின்றி இற ந்திருக்கலாம். ஆனுல் அவர்கள் களையினுல் வருந்தித் துணை ஒன்றும் எதிர்பாராது புலலிலே இருக்கும் பொழுது தேவசெயலாய் ஒரு நாட்டுப் புறத்தவன் அவ்வழியாப் போகவே கானிமீட் மிகவுந்தைரி யத்தோடு பேசத் தெண்டித்து "இடையா இக்காட்டி லே பணத்திற்குப் போசனம் எங்கேயாவது அகப்ப டுமாயிருந்தால் நாங்கள் சற்றுக் களையாறும் பொரு ட்டுத் தயவு செய்து ஓரிடத்துக்குக் கூட்டிக் கொ

2

ண்டுபோ. இச்சிறு பெண், என் சகோதரி, வழி நடையாற் களைத்துப் போசனம் இல்லாது மூர்ச்சிக் கின்றனள்'' என்ருன்.

அம்மனிதன் அதற்கு மறுமொழியாகத் தான் ஒரு இடையனுக்கு வேலைக்காரனென்றும், தன் எச மான் வீட்டை அப்பொழுது விற்கப் போகிறபடி யால் அங்கே அவர்களுக்கு உபசரணை நடவாதென் றும், தன்னேடு அவர்கள் சென்ருல் தான் தன்னுல் இயன்ற அளவு செய்கிறதாகவுஞ் சொன்னுன். கஷ் டத்தினின்றுஞ் சீக்கிரம் நீங்கலாம் என்னும் எண ணத்திஞல் பலம வரவே அவர்கள் அவனுடன்சென று, இடையனது வீட்டையும் மாடுகளையும் வாங் கித் தங்களைக் கூட்டிக்கொண்டு வநதவனையும் தங்களிடத்து வேலைக்காரஞக வைத்துக்கொண்டா ர்கள். அதிட்ட வசமாய் ஒரு சிறந்த குடிசையும் போசனத்திற்கு வேண்டிய சாமான்களும் அகப்பட வே அவர்கள் காட்டிலே அரசன் எங்கிருக்கிருன் என்றறியும் வரைக்கும் அங்கே இருப்பதாகத் தீர்மா னித்தார்கள். பிரயாணத்தாலுண்டான களை எல் லாம் நீங்கவே அவர்கள் தமது புதுச்சீவனத்தை விரும்பினவாகளாகி, தாம் இடையனும் இடைச்சியு மாக வேஷம் பூண்டதன்றி மெய் மெய்யே தாம் இடையனும் இடைச்சியும் என்று தாமேகருதும் பரு வத்தாரானுர். ஆனுல் ஆர்லாண்டோ தன்தந்தையின் சிநேகனுகிய சார் ரவ்லாண்ட் பாய்ஸ் என்பவரின்

மக்ஞகையால் அவன்மேற் காதல்கொண்ட ராசலி ண்டாக முன்னே தான் இருந்ததாகக் கானிமீட் நினைப்பது முண்டு. தாம் கஷ்டப்பட்டு நடந்துவந்த அவ்வளவு தூரத்திற்கு அப்புறம் ஆர்லாண்டோ இரு க்கிறுனென, கானிமீட் நினைத்திருந்தபோதிலும் ஆர்லாண்டோ ஆர்டன் காட்டிலேயே இருப்பதாக விரைவிலதெரிந்தது. இந்த அதிசயம் இவ்விதமாகச் சம்பவித்தது.

ஆர்லாண்டோ சார் ரவ்லாண்ட் பாய்ஸ் என்பவ ரின் இளையமகன். அவரிறந்த பொழுது ஆர்லாண டோ மிகவுஞ் சிறுவனுய் இருந்தமையால் அவனே அவன் தமையனுகிய ஆலிவரிடம் ஒப்பித்து அவனு க்கு நல்லகல்வியுங் கொடுத்து குடும்பத்திற்குத்தக்க மரியாதையோடு இருப்பதற்குவேண்டிய மற்றெல்லா ப் பொருள்களேயுங் கொடுக்கும்படி கட்டளே யிட் டிருந்தனா. ஆனுல் ஆலிவர் மிகவுங் கெட்ட சகோ தரன் ஆனமையால் அவன் தகப்பன் சொன்னவற் றைச்சிறிதுங் கவனியாது தமபியைப் பள்ளிக்கூடத் திற்கு அனுப்பாதும் அவனேப்பற்றிச் சிறிதுங் கவனி யாதும் இருந்தான். ஆனுல் ஆர்லாண்டோ சுபாவத் திலும் தன் நற்குணங்களிலும் தன் தகப்பனேப் போன்றவனுகையால் கல்வி இல்லாதிருந்தும் மிக வுங் கவனத்தோடு வளர்க்கப்பட்ட ஒரு வாலிபனேப் போற் ருேற்றினன். ஆலிவர் கல்வி நலம் இல்லாத தனது சகோதரனது அழகியவடிவையும் மேன்மை

யான நடையையுங் கண்டு பொறுமை கொண்டு கடைசியாய் அவனைக்கொல்ல விரும்பினான். அதற்காகவே பலரையுங்கொண்டு தன் தம்பியைப் பலரைக்கொன்றுபேர் பெற்றிருக்கும் அந்தமல்லனோடு போய்யுத்தஞ் செய்யும்படியாகத் தூண்டி விட்டனன். இந்தக்கொடிய சகோதரனது கவனவீனந் தான் ஆர்லாண்டோவைத் தனக்குச் சிநேகர் ஆரும் இல்லையென்றுந் தான் இறக்கப்பிரியப்படுகிற தாயுஞ் சொல்லச் செய்தது.

அவனது கெட்ட எண்ணங்களுக்கு விரோதமாக அவனது தம்பி வெற்றி அடையவே அவனது பொறுமையும் பகையும் அளவற்று, ஆர்லாண்டோ படுத்து நித்திரைசெய்யும் அறையை எரித்துப்போடுவதாகச் சபதஞ்செய்தான். இந்தச் சபதத்தை அவன் தகப்பன் இடத்து நெடுநாள் இருந்தவனும ஆர்லாண்டோ சார் ரவ்லாண்டை ஒத்திருப்பதாக அவன்மேல் மிகவும் பட்சமுள்ளவனும் ஆகிய நம்பிக்கை உள்ள ஒருவேலைக்காரன் தற்செயலாய்க் கேட்டனன். அந்தக் கிழவன் ஆர்லாண்டோ அட சன் அரண்மனையிலே இருந்து வரும்பொழுது வழியிலே சந்திப்பதற்காகப் புறப்பட்டுப்போய் அவனைக்கண்ட உடனே தனக்கு அருமையான இளைய எஜமானுக்கு வரக்கூடிய தீங்குகளை நினைத்துத் தாங்க முடியாதவனாய்ப் பின்வருமாறு கத்தினான். "ஆ எனது சாந்தமுள்ள எஜமானே, எனது இனி

ப ஏஜமானே, ஆ பழைய சார் ரல்லாண்டிற்கு ஓர் ஞாபகப்பொருளே, நீர் நன்னடை உள்ளோராய் ஏன் இருக்கவேண்டும், சாந்தமும் மகிமையும்வீர மும் உடையோராய் ஏன் இருக்கவேண்டும், அந் தப்பெரிய வீரனைவெல்ல ஏன் விரும்பவேண்டும். உமது கீர்த்தி வீட்டிற்கு அதிசீக்கிரம் வந்துவிட் டது.” இதைக்கேட்டு ஆர்லாண்டோ ஆச்சரியப் பட்டு யாது சமாச்சாரம் என வினவினன். அதற் கு ஆர்லாணடோமேற் சகலரும் பட்சமாய் இருப்ப் தைப்பாாத்துப் பொறாதவனும், அவனுக்கு இப் பொழுது அரண்மனையிற்கிடைத்த வெற்றியினல் வந்த கீர்த்தியைக் கேள்விப்பட்டும் அவனது கெ ட்ட சகோதரன் அவன் அறைக்கு அன்று இரவு நெருப்புவைக்க யோசித்து இருப்பதாக அக்கிழவ ன் சொல்லி முடிவில் அந்த அபாயத்தில் நின்றும உடனே ஓடித்தப்பும்படி புத்தியுஞ் சொல்லினன். ஆர்லாண்டோ இடத்துப் பணம் இல்லாதிருப்பதை அறிந்து ஆதாம் (அக்கிழவனது பெயரதே) தா ன் சேகரித்து வைத்திருந்த பணத்தைக்கொண்டு வந்து “என்னிடத்திலே ஐந்நூறு கிரவுணுண்டு. எனக்கு வயோதிப காலத்தில் உதவும்படி உனது தந்தையிடத்து வேலையாய் இருக்கும்பொழுது சேர த்துவைத்தது. அதை எடுத்துக்கொள். காக்கைக்கு விருந்திட்டவர் எனக்குப்பிற்காலத்துத் துணையா யிருக்கட்டும். இதோ இருக்கின்றது பணம். இதை

ல்லாம் உனக்கே கொடுக்கிறேன். என்னை உனது வேலைக்காரனாய் வைத்துக்கொள். யான் கிழவனாயிருந்தாலும் உனது வேலைகளை வாலிபன்போற் செய்கிறேன்.'' என்றனன். "ஓ மிகவும் நல்ல வயோதிபனே, முற்காலத்தில் இருந்த விசுவாஸத்தோடு கூடிய ஊழியம் உன்னிடத்து எவ்வளவு நன்றாய்ப் புலப்படுகின்றது. இந்தக்காலத்துக்கு நீ தகுந்தவனல்ல. நாம் கூடப்போவோம். நீ வாலிபத்துத் தேடிய தேட்டம் செலவாக முன்னே யான் நம்மிருவர்க்கும் செலவுக்கு வேண்டியதுவரும் வழிபார்த்துக்கொள்ளுகிறேன்'' என்று ஆர்லாண்டோ சொன்னான்.

இந்த விசுவாசமுள்ள வேலைக்காரனும், அவனால விரும்பப்பட்ட எசமானுமாகிய ஆதாமும் ஆரலாண டோவும் புறப்பட்டு எவ்வழிபோவதெனத் தெரியாது நடந்து ஆடன் காட்டிற்குவந்து அங்கேகாணி மீட்டும் அலைவும் முன்வருத்தப்பட்டதுபோலவே வருத்தப்பட்டார்கள். பசியினாலுங் களையினாலும் வலிகுறையும் வரைக்கும் அலைந்தார்கள். கடைசியில் ஆதாம் "என் அருமை எசமானே பசியினால் இறக்கிறேன். இனி நடக்க என்னால் முடியாது'' எனச்சொல்லி அவ்விடமே தனக்குப் பிரேதக் குழியென நினைத்துக் கீழே படுத்துக்கொண்டு தன் எசமானுக்கு வந்தனங்கூறினன். அவன் மிகவுங் களையாயிருப்பதை ஆர்லாண்டோ பார்த்துத் தனது

கிழவேலைக்காரனைத் தன் [illegible]ளிஞல் தூக்கிக்கொ ண்டுபோய் ஒரு சிறந்த மர[illegible] விட்டு "அ[illegible] இங்கேயிருந்து சந்தோஷமாய் உன் கைகாலகளைக் களையாற்றிக்கொள். இறப்பதைப்பற்றிப் பேசாதே" என்று சொல்லிவிட்டு உணவு ஏதாவது அகப்படு மாவென்று நாலுதிசையும் தேடிச்சென்று கடைசி யாய்க் காட்டில் அரசனிருக்கும் இடத்துக்கு வந் தான். அரசனும் அவனைச்சோநதோரும் அப்பொ ழுதுதான் சாப்பிடப்போகிருர்கள். அரசன் மே லே மரநிழல் அல்லாது வேறு விதானமின்றிப் புல்லிலே உட்கார்ந்திருந்தான். ஆர்லாண்டோ பசியிஞல துணிந்தவஞய் அவர்களது உணவை வலோத்காரமாய்ப் பிடுங்க நினைத்துக் கத்தி உரு விக்கொண்டு "நில்லுங்கள். அதன்மேற் சாப்பிடா தேயுங்கள். அவ்வுணவு எனக்குவேண்டும்" என்ற னன். அரசன் பசியிஞல் அவனுக்கு அவ்வளவு தைரியமுண்டாயிற்ரு அல்லது அவன் நல்லொழு க்கத்தை வெறுக்கும் முரடஞ என விஞவிஞன். அதற்கு ஆர்லாண்டோ தான் பசியிஞல் இறப்பதா கச்சொன்ஞன். அதற்கு அரசன் அவனுட்கார்ந்து புசிக்கலாம் என்றனன். அரசன் அவ்வளவு சாந் தமாய்ப் பேசுவதைப்பார்த்து ஆர்லாண்டோ தன் வாளை உறையிலேபோட்டு அவர்களது உணவைத் தான் முரட்டுத்தனமாகக் கேட்டதைப்பற்றி மிகவும் விசனப்பட்டவஞய்ச் சொல்வான். "என்னைமன்னிக்

கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இங்கே சகல மும் மூர்க்கத்தனமாய் நடக்குமென யான் நினைத் தேன். அதனாலேயே கடினமான கட்டளை செலு த்துவோன்போற் பேசினேன். ஆனால் இக்காட் டில் மரநிழலிற் காலங்கழிக்கும் நீவிர் யாராயிருந் தாலும் எப்பொழுதாவது நீங்கள் நல்லநாட்களைக் கண்டிருந்தால், கோயிலுக்கு மணியடிக்கும் இடத் தில் எங்கேயாவது இருந்திருந்தால, நலலவன விரு ந்து எப்பொழுதாவது உணடு இருந்தால, உங்கள் கண்ணிலிருந்து எப்பொழுதாவது ஒரு துளி கண ணீர் துடைத்திருந்தால, இரக்கமென்பது யாதெ னவறிந்தாவது இரக்கப்பட்டாவது இருந்தால், என து சொல்லைக்கேட்டுச் சிறிது உபசாரஞ்செய்யுங் கள்." அதற்கு அரசன்சொல்வான் "நீ சொல்வது போல யாம் நற்காலத்தை அறிந்தோர்களே. இந் தக்கொடூரமான காட்டில் இப்பொழுது வசித்தா லும் யாம் பட்டணங்களிலும் நகர்களிலும் வசித் திருக்கின்றேம். பரிசுத்தமான மணி ஓசை கேட் டுக் கோவிலுக்குப்போய் இருக்கின்றேம. நல்லோர் விருந்து உண்டிருக்கின்றேம். சிறந்த இரக்கத்தினா ல் உண்டான கண்ணீரைக் கண்ணினின்றும் வ ழித்திருக்கின்றேம். ஆகையால் உட்கார்ந்து நமது உணவில் உனக்குத்தேவையான அளவு எடுத்துக் கொள்." அதற்கு ஆர்லாண்டோ "மெய் அன்போடு என்னை நொண்டி நொண்டிப் பின் தொடர்ந்து பசி

யினாலும் மூப்பினாலும் மிகவுந் தளர்ந்த ஒருகிழவ னிருக்கின்றான். அவன் திருப்தி அடையும் வரைக்கும் யான் ஒரு சிறுதுகளுந் தீண்டேன்" என்றான். அதற்கு அரசன் "போய் அவனைக்கண்டு இங்கே கொண்டுவா. அதுவரையும் யாம் புசியாதிருக்கின்றோம்" என்றனன். உடனே ஆர்லாண்டோ குட்டியைத்தேடி உணவளிக்கச்சென்ற பெண் மான் போலச்சென்று சிறிதுநேரத்தில் ஆதாமைக் கையில் தூக்கிக்கொண்டு வந்து சேர்ந்தான். "வணங்கத்தக்க உனது சுமையைக் கீழேவை. நும் இருவர்க்கும் வந்தனம்" என்று அரசன் கூறினான். அவர்கள் கிழவனுக்கு உணவூட்டிச் சந்தோஷிப்பித்தார்கள். அவனும் களை தேறிப் பலமும்சௌக்கியமும் திரும்பப்பெற்றனன்.

அரசன் ஆர்லாண்டோ யாரென விசாரித்துத் தனது பழைய சிநேகிதன் சார் ரவ்லாண்ட் பாய்ஸ் என்பவரின் மகனெனவறிந்து அவனைத் தன்பாதுகாவலில வைத்துக்கொண்டனன்.

ஆர்லாண்டோவும் அவனது வேலைக்காரனாகிய கிழவனும் அரசனுடன் காட்டிலிருந்தனர். கானிமீட்டும் அலீனாவும் வந்து முற்கூறியபடி இடையனது குடிசையை வாங்கிச் சிலநாட்களிலே ஆர்லாண்டோ காட்டுக்குவந்தனன். கானிமீட்டும் அலீனாவும் ராசலிண்டென்னும் பெயர் மரங்களில் வெ

ட்டப்பட்டிருப்பதையும் ராசலிண்டுக்கு எழுதிய காதலைக் காட்டும பல செய்யுட்கள் மரங்களிற் கட்டித் தொங்க விட்டிருப்பதையும் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். இதெப்படி யென அவர்கள் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது ஆர்லாண்டோவைச்சந்தித்து ராசலிண்ட் அவனுக்குக்கொடுத்த சங்கிலியை அவன் கழுத்திற்கண்டார்கள்.

• தயை தாட்சணியத்தால் தன் மனதைக்கவர்ந்து அவளதுபேரை மரங்களில வெட்டுவதிலும அவள் மேலே பாக்களெழுதுவதிலுமே தனது கால முழுவதையுஞ் செலவழிக்கும்படி செய்த ராசலிண்டென்னும் அழகிய ராஜகுமாரத்தியே கானிமீட்டென ஆர்லாண்டோ சிறிதும் நினைத்தவனல்லன். ஆயினும் அந்த ஆயவாலிபனது அழகைப்பார்த்து சந்தோஷித்து, அவனுடன் பேசத்தொடங்கி, அவனுருவத்திலே தான் மிகவும் காதலிக்கும் ராசலிண்டின் உருவத்தைக் காணுவதாக நினைத்தான். ஆனால் அந்நங்கையின் காம்பீரமான நடை அவனிடத்தில் இல்லாதிருந்தது. ஏனெனில் கானிமீட் சிறுவயதிற்கும் புருடத்துவத்திற்கும் இடையிலுள்ள வாலிபத்தில் தோற்றப்படும் துணிந்த செய்கைகள் எல்லாமுடையோனாய்த் தோற்றப்பட்டதுமன்றி சாதுரியமாயும் வேடிக்கையாயும் ஆர்லாண்டோவிடத்தோர்காதல் கொண்டோனைப்பற்றிப் பேசி, "ஒருவன் நமது காட்டில் திரிந்து இள மரங்களின் பட்

டைகளை யெல்லாம் ராசலிண்டென்னும் பெயரை வெட்டிக்கெடுப்பதுமன்றி பூச்செடிகளிலும முட்ப த்தைகளிலும் ராசலிண்டின்மேல் எழுதிய பாக்க ளைக்கட்டித் தொங்க விடுகின்றான். அவனையான் காண்பேனேல் அவனது காதலைமாற்றக்கூடிய நல் லதோர்புத்தி சொல்லுவேன்'' எனக்கூறினன்.

ஆர்லாண்டோ கானிமீட் குறித்துப்பேசிய காத லன் தானே என்றும் அவனுக்குச் சொல்வதாக கக்கூறிய புத்தியைத் தனக்குச் சொல்லும்படி யாகவும கேட்டான். கானிமீட் சொல்லியமருந் தும் அவனுக்குக் கூறிய புத்தியும் யாதெனில் தானுந் தங்கையும் வசிக்குங் குடிசைக்கு ஆர்லாண்டோ ஒவ்வொருநாளும் வரவேண்டுமென்பதே. "அதன் மேல்'' கானிமீட் சொல்கிறான் "யான் ராசலிண் ட்போல அபிநயிக்கிறேன். யான் ராசலிண்டாயி ருநதால் என்னிடத்தில் எவ்வளவு அன்பு பாரா ட்டுவாயோ அவ்வளவு அன்பு நீபாராட்டு. அதன் மேல பெண்கள் தமது காதலரிடத்து நடப்பது போல நான் நடந்து உன் காதலைப்பற்றி நீ வெட் கப்படுமபடி செய்கிறேன். இவ்விதமே யான் உனது நோயை மாற்றுவேன்.'' ஆர்லாண்டோ அம்மருந்தி ன்மேல் மிகவும் நம்பிக்கை வையாது போயினும் கானிமீட்டின் குடிசைக்கு நிதமுஞ்சென்று அன்பு பாராட்டுவதுபோல அபிநயிக்க ஒத்துக்கொண்ட னன். கானிமீட் அலீனு இருவரையும் ஆர்லாண்

டோ நிதமுஞ்சென்றுகண்டு, கானிமீட் என்னும் இடையனைத் தனது ராசலிண்டென அழைத்து வாலிபர் தாம் காதலிக்கும்பெண்களிடத்துப் பேசும்பொழுது உபயோகிக்கும் இனிய புகழ்ச்சி கூறும் வார்த்தைகளை எல்லாம் உபயோகித்துப்பேசுவான். ஆயினும் ஆர்லாண்டோ ராசலிண்டின்மேற் கொண்டிருந்த காதலை மாற்றுவதில் கானிமீட் சிறிதுஞ் சித்திபெற்றதாகத் தோற்றவில்லை. ஆர்லாண்டோ (தனது ராசலிண்டே அக்கானிமீட்டெனக் கனவிலும் நினையாது) அதெல்லாம் வேடிக்கைவிளையாட்டென எண்ணியிருந்தபோதினும் தன் மனதில் உள்ளயாவற்றையுஞ் சொல்லத்தருணம் அதனால் ஏற்பட்டமையால் சந்தோஷித்திருந்தனன். கானிமீட்டும் ஆர்லாண்டோவின் காதற்பேச்சு யாவும் பேசவேண்டிய இடத்திலேயே பேசப்பட்டன என நினைத்து ஆனந்தித்தனன்.

இவ்விதமாக இவ்வாலிபர் சந்தோஷத்தோடு அநேகநாட்கழித்தனர். அலீனாவும் அதனால் கானிமீட்டுக்கு ஆனந்தமுண்டாவதைப்பார்த்துப் பிரியம்போற் செய்யட்டுமென அவர்களது விளையாட்டுக்காதலைப்பார்த்துப் பேசாது இருந்தனள். ராசலிண்டென்னும் பெண் தனதுதகப்பன் காட்டில் எங்கிருக்கிறார் என ஆர்லாண்டோ மூலமாக அறிந்தும் தந்தைக்குத் தன்னைப்பற்றி யாதுந் தெரிவிக்க இல்லை எனக் கானிமீட் இடத்திற்சொன்னவளும்

அல்லள். கானிமீட் ஒருநாள் அரசனைச் சந்தித்து சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தனன். அரசன் அவனது குலம் யாதெனவிசாரித்தபொழுது அரச னைப்போல உயர்குலத்திற்குத் தானுஞ் சேர்ந்ததாக மறுமொழி சொல்ல அரசன் அவ்வாய வாலிபன் அரசகுலத்தைச் சேர்ந்தோனெனச் சிறிதும் நினை யாது புன்னகைகொண்டனன்.

அரசன் சந்தோஷமாக இருப்பதைப்பார்த்துக் கானிமீட் தன்னைப்பற்றிச் சொல்லவேணடியவற் றை எல்லாம் சிறிது நாட்கழித்துச் சொல்லலாமெ னச் சும்மாவிருந்தனன்.

ஓர்நாட் காலையில் ஆலாண்டோ கானிமீட்டை ப்பார்க்கப் போகும்பொழுது வழியில் ஒருவன் நிலத் தில் நித்திரையாய்க்கிடக்க அவன் கழுத்தை ஒரு பச்சைப்பாம்பு சுற்றிக்கொண்டிருக்கக் கண்டனன். ஆர்லாணடோ வருவதைப்பார்த்துப் பாம்பு பற்றை யில் நழுவிற்று. ஆர்லாண்டோ கிட்டச்சென்றபொ ழுது அங்கே ஒரு பெண் சிங்கம் பதுங்கிக்கொண் டு தலையை நிலத்தில் வைத்து நித்திரையாய் இருப் பவன் எப்பொழுது எழுமபுவானெனப் பூனைபோற் காத்துக்கொணடிருந்தது. (ஏனெனில சிங்கம் இ றந்ததையாவது தூக்கத்திலிருப்பதையாவது புசிப் பதில்லை யென்பது கூற்று) அம்மனிதனைப் பாமபி னாலும் சிங்கத்தினாலுமுண்டாகுந் தீங்கினின்றும்

நப்புவிக்கத் தெய்வச்செயலாய் ஆர்லாண்டோ வந்தநாகத் தோற்றிற்று. ஆர்லாண்டோ அவனதுமுகத்தைப் பார்த்தபொழுது நித்திரையாய் அவ்வளவு தீங்கு சம்பவிக்கக்கூடிய ஸ்திதியில் இருந்தவன் தன்னை மிகவுங் கொடுமையாக நடத்தித் தனது உயிரை நெருப்பிற்கு இரையாக்குவதாகப் பயமுறுத்திய தன் சகோதரன் ஆலிவரா யிருக்கக்கண்டனன். அவனைப்பசியோடு உழலும் பெண்சிங்கத்திற்கு இரையாகவிட விரும்பியும் சகோதரப்பற்றும் தனது சாந்தகுணமும் தன் சகோதரன்மீது இருந்த கோபத்தைமேற்கொள்ளவே தனது வாளையுருவிச் சிங்கத்தை எதிர்த்துக்கொன்று, தன் சகோதரன் உயிரை நச்சுப்பாம்பிடத்து இருந்துங் காப்பாற்றினன். ஆனல் ஆர்லாண்டோ சிங்கத்தை வெல்வதற்கு முன் அது கூரிய நகத்தால் அவனது கை ஒன்றைக் கிழித்தது.

ஆர்லாண்டோ சிங்கத்தோடு சண்டை செய்துகொண்டிருக்கும்பொழுது ஆலிவர் எழும்பித் தான் மிகவுங் கொடுமையாக நடத்திய தன் தம்பி ஆர்லாண்டோவே தன் சீவனையுங்கவனியாது அக்கொடிய மிருகத்தினின்றும் தன்னைக் காப்பாற்றுவதைக்கண்டு வெட்கமுந் துக்கமும் தன்னைப்பிடிக்கத் தனது கெட்ட நடத்தையைப்பற்றி மன வியாகூலமடைந்து தான் செய்த தீங்கிற்காகத் தன்னை மன்னி

க்கும்படி கண்ணீர்ப்பெருக்குடன் தன் தம்பியை வேண்டிக் கேட்டுக்கொண்டனன். ஆர்லாண்டோ அவன் துக்கப்படுவதைப்பார்த்து மன்னித்தனன். அவர் ஒருவரை ஒருவர் ஆலிங்கனஞ்செய்து, ஆர்லாண்டோவைக் கொல்லு மெண்ணத்தோடு காட்டுக்குவந்த ஆலிவர் அன்று தொட்டு அவனை உண்மையான சகோதரப்பற்றுடன் நேசித்தனன்.

ஆர்லாண்டோவின் கைக்காயத்தினின்று இரத்தம் அதிகமாய் ஓடினதினால் கானிமீட்டைப் பார்க்கப்போக முடியாத பலவீனமுள்ளவனானான். அதனால் அவன் ஆலிவரைத் தான் விளையாட்டுக்கு ராசலிண்டு என்று கூப்பிடும் கானிமீட் இடம்போய்த் தனக்குச் சம்பவித்ததைச் சொல்லும்படி கேட்டுக்கொண்டனன். அவ்விதமே ஆலிவர் போய்க் கானிமீட் அலீனா இருவர்க்கும் ஆர்லாண்டோ தனது உயிரைக் காப்பாற்றினதைச் சொன்னான். ஆர்லாண்டோவின் வீரத்தின் கதையையும் தான் தெய்வச்செயலாய்த் தப்பினதையுஞ் சொல்லி முடித்த பிறகு தான் ஆர்லாண்டோவின் சகோதரனென்பதையும், தான் அவனைக் கொடுமையாய் நடத்தியதையுஞ் சொல்லித் தாம் சிநேகிதரானதையுஞ் சொன்னான்.

தான் செய்த குற்றங்களுக்காக ஆலிவர் பட்ட துக்கத்தினால் அலீனாவின் மனமெடுபட அவள்

அவன்மேல்உடனே காதல் கொண்டனள். ஆலிவா தன் குற்றத்திற்குத் தான் துக்கப்பட்டதாகச் சொல்வதைக்கேட்டு அவள் மிகவும் மனம் இரங்கியதைப்பார்த்து அவனும் சடிதியாய் அவள்மேற் காதல்கொண்டனன். ஆனால் இந்த இருவர் மனதிலும காதல் களவாக் குடிகொள்ளும பொழுது கானிமீட் அவனைச் சும்மா இருக்கவிட்டவன் அல்லன். ஏனெனில் ஆர்லாண்டோ மிகவுங் கெடுதி சமபவிக்கக்கூடிய நிலையில இருந்தான் என்பதையும், சிங்கத்தினால் அவனுக்குக் காயமபட்டது என்பதையும கேட்டு கானிமீட் மூர்ச்சித்தனன். கானிமீட் மூர்ச்சை தெளிந்து எழுந்தபொழுது தான் ராசலிண்டா இருப்பதாக மனதிற்பாவித்து மூர்ச்சித்ததுபோல அபிநயித்ததாகச் சொல்லி ஆலிவரைப்பார்த்து "உமது தம்பி ஆர்லாண்டோ இடத்தில் நான் எவ்வளவு நன்றாய் மூர்ச்சித்ததுபோல அபிநயித்தேன் என்பதைச்சொல்லும்" என்றனன். ஆனால் ஆலிவர் அவன் முகம் வெளிறிப்போய் இருந்ததை நோக்கி மெய் மெய்யாகவே மூர்ச்சித்தானென அறிந்து அந்த வாலிபனது மனத் தளாச்சியைப் பார்த்து ஆச்சரியப்பட்டு "நீ அபிநயித்தால் ஒருமனிதனைப்போல் தயிரியத்தோடிருக்க அபிநயி" என்றனன். அதற்கு கானிமீட் "அப்படியே செய்கிறேன். ஆனால நியாயமாய் நான் பெண்ணாய் இருக்கவேண்டும்" என்றனன்.

இம முறை ஆலிவா அதிகநேரம நின்று கடை
யாய்த் திரும்பிப்போனபொழுது தம்பிக்குச் சொ
லவதற்குப் புதினம அநேகமிருந்தன. ஏனெனில
ஆலாணடோ காயபபட்டானென்பதைக் கேட்டு
கானிமீட் மூர்ச்சித்த கதை தவிர, அந்த அழகிய
ஆயப்பெண்ணாகிய அலீனாமேல தான் காதலகொ
ணடதையும, முதற் சமபாஷணையிலேயே அவள்
தன வேண்டுகோளைச் சிறிது பிரியத்தோடு கேடட
தையுஞ் சொலலி, ஏதோ முடிவு கட்டியதொன்று
போலத் தான் அலீனாவை விவாகஞ்செய்ய வேண
டுமென்றும் அவள் மேற கொணடிருக்கும அளவி
நத காதலினால் தான் அங்கேயே ஒரு ஆயனைப
போல வசித்துக்கொண்டு நிலத்தையும் வீட்டையும
ஆலாண்டோவுக்குக் கொடுத்து விடுவதாகவும
தன் தம்பியிடத்துச் சொன்னான்.

அதற்கு ஆர்லாண்டோ "அது எனக்குச் சமம
தந்தான். உன்னுடைய விவாகம நாளைக்கே நடக்க
ட்டும். நான் அரசனையுஞ் சிநேகர்களையும விவாக
த்திற்கு அழைக்கின்றேன். நீ போய் உன் ஆயப்
பெண்ணை இதற்கு இசையச்சொல். அவள் இப்
பொழுது தனியே யிருக்கின்றாள். இதோ பார் அவ
ள் சகோதரன் இங்கேவருகின்றான்" என்றனன்.
ஆலிவர் அலீனாவிடத்துப்போனான். ஆர்லாண்டோ
கிட்ட நெருங்கக்கண்ட கானிமீட் தன் காயம்
பட்ட சிநேகனது சௌக்கியத்தைப்பற்றி விசாரி

க்கவந்தான். ஆலிவருக்கும் அலீனுவுக்குஞ் சடிதி
யில் உண்டான காதலைப்பற்றி ஆர்லாண்டோவும்
கானிமீட்டும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, ஆர
லாண்டோ தான் தன் சகோதரனை மறுநாள் விவா
கத்திற்கு அந்த ஆயப்பெண்ணை யிணங்கச்செய்யும்
படி அனுப்பி இருக்கிறதாகச்சொல்லி அன்றையதி
னமே தான் ராசலிண்டை விவாகஞ் செய்யத் தன
க்கு மிகவும் விருப்பமிருக்கிறதாகச் சொன்னான்.
இந்த ஏற்பாட்டை ஒத்துக்கொண்ட கானிமீட் ஆர்
லாண்டோ தான் வாயாற் சொல்வதுபோல் உண்
மையாய் ராசலிண்டைக் காதலித்தால் அவனது
எண்ணம் நிறைவேறவேண்டும் என்றும் மறுநாட்
காலையில் ராசலிண்ட் தன் சுயரூபத்தோடு அங்கே
வருவதற்கும் ஆர்லாண்டோவை மணம் புரிவதற்கு
இசைவதற்கும் தான் உத்தரவாதியென்றுங்கூறி
னான்.

கானிமீட் தானே ராசலிண்டென்னும் நங்கையா
கையாற் சுலபத்தில் செய்யக்கூடியதும், ஆனால்
பார்வைக்குமாத்திரம் ஆச்சரியமாய்த் தோற்றுவது
மாகிய அந்த செய்கையைத் தான் மந்திரவித்தையி
ற் பேர்போன தனது மாமனிடத்துக் கற்றுக்கொ
ண்ட சிலவித்தைகளினுற் செய்து நிறைவேற்றுவதா
கச்சொன்னான். மிகவும் காதல்கொண்டிருந்த ஆர்
லாண்டோ அதைப்பாதி நம்பியும் பாதி நம்பாதும்

கானிமீட் சொல்லியது வேடிக்கைக்கா அல்லது நிசமாயா என வினவினன்.

அதற்குக் கானிமீட் "என்னுபிராணே நான்செய்வேன். ஆகையால் உன்னிடத்தில் இருக்கும் நல்ல உடுப்புகளைப்போட்டுக்கொண்டு அரசனையும் உன் சிநேகர்களையும் விவாகத்திற்கு வரச்சொல்லு. நீ நாளைக்கு ராசலிண்டை மணஞ்செய்ய வேண்டுமென விரும்பினல் அவள் நாளைக்கு இங்கே இருக்கக் கடவள்" என்றான். மறுநாட் காலையில் ஆலிவர் அலீனவின் சம்மதத்தைப்பெற்றுக்கொண்டு இருவருமாய் அரசன்முன்னே வந்தார்கள். அவர்களோடு ஆர்லாண்டோவும் வந்தான். அவர்களெல்லாம் இந்த இரண்டு கலியாணத்திற்காகவும் கூடியிருந்தமையாலும், பெண்களில் ஒருத்தியே வந்திருந்தமையாலும், ஆச்சரியமும் சந்தேகமும் உண்டாக அதிகமாய் எல்லாரும் கானிமீட் ஆர்லாண்டோவை வேடிக்கை பண்ணுவதாகநினைத்துக்கொண்டார்கள்.

அரசன் தன் சொந்தமகளை அவ்வளவு நூதனமாகக்கொண்டு வரப்படப்போகிருளெனக் கேள்விப்பட்டு ஆர்லாண்டோவைப்பார்த்து "அந்த ஆயன் தான் செய்வதாகச் சொல்லுகிறதை செய்துமுடிப்பானென நீ நம்புகிருயா" என, அவன் "அதைப்பற்றியென்ன நினைப்பதென எனக்குத்தெரியவில்லை" எனச் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது கானிமீ

ட்வந்து அரசனைநோக்கி "நான் உமது மகளைக்கொணடுவந்தால் அவள் ஆர்லாண்டோவை மணம்புரிய நீர் சம்மதிப்பீரா" என அரசன் "அவளோடுகூடக் கொடுக்க இராச்சியங்களிருந்தாலுஞ் சம்மதிப்பேன்" என்றனன். அதன்மேல கானிமீட் ஆர்லாண்டோவைபபாாத்து "அவளை நான் கொணடுவந்தால் நீ அவளை மணமபுரிவதாகச் சொல்லுகிறுயா" என அவன் "பல இராச்சியங்களுக்கு அரசனுயிருந்தாலும அவ்விதமேசெய்வேன்" என்றுன். உடனே கானிமீட்டும் அலீனுவும் ஒன்றுய் வெளியேசென்றுாகள். கானிமீட் தான்போட்டிருந்த ஆண் உடுப்புகளை எறிந்துவிட்டுப் பெண் உடுப்புகளை போட்டுக் கொண்டு மந்திர சக்தியில்லாமலே ராசலிணடாயினுன். அலீனுவும் தனது நாட்டுப்புறத்து உடுப்புகளைக் களைந்து தனதுவிலே உயாந்த உடுப்புகளைத்தரித்துக் கொண்டு கஷ்டமில்லாமலே சீலியாவென்னும் நங்கையாகமாறினுள். அவாகள் வெளியேபோயிருந்த பொழுது அரசன் அந்த ஆயன் தன்மகள் ராசலிண்டைப்போற் தோற்றுவதாகத் தான் நினைத்ததாக ஆர்லாண்டோவிடத்துச்சொன்னுன். ஆர்லாண்டோ தானும் அவ்விதமாக நினைத்ததாகச்சொன்னுன். ஆனுல் இவையெல்லாம் எவ்விதம் முடியுமோ என அவர்கள் ஆச்சரியப்படுவதற்கு முன்னேயே ராசலிண்டும் சீலியாவுந தங்கள் உடுப்புடன் வந்தார்கள்.

ராசலிண்ட தான் மந்திரவித்தையால் அங்ஙவந்த தாக அபிநயிக்காது தன் தந்தைக்கெதிரில் முழங் காலினின்று ஆசீர்வதிக்கும்படி கேட்டனள். அவள் அவ்வளவு சடிதியில் அங்கெவந்ததினால் அங்கேயிரு ந்த சகலருக்கும் அளவிறந்த ஆச்சரியம் உண்டான மையால் அது மந்திரவித்தை எனவே தோற்றலாம். ஆனால் ராசலிண்ட் அதன்மேல் தகப்பனோடு விளை யாடாது தான் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டதும், தான ஆயனாகவும் தன் சகோதரி சீலியா தன் தங் கையாகவும் தான் காட்டில் வசித்ததும் கூறினாள்.

அரசன் விவாகத்திற்குத் தான் கொடுத்த சம்மத ந்தை உறுதிப்படுத்த, ஆர்லாண்டோவும் ராசலிண் டும், ஆலிவருஞ் சீலியாவும் ஒரேதரத்தில் விவாகஞ் செய்யப்பட்டனர். அவ்வித காலங்களில் நடக்கும் பவனியும் தளுக்கும் அக்காட்டில் நடக்க முடியா தும்போனாலும் அதினின்றும் மிகவும் சந்தோஷமான விவாகம் வேறெங்கும் நடந்ததில்லை. அரசனதும் அக்காதலரதும் இன்பத்தை நிறைவேற்ற வேறொ ன்றும் வேண்டியதில்லையென்று சொல்லும்படி அ வர்கள் குளிர்ந்த மரநிழலில் உட்கார்ந்து மான் இ றைச்சி புசித்துக்கொண்டிருக்கையில் யாரும் எதி ர்பாரா ஒருதூதன் அரசனுக்கு அரசு திருப்பிக் கொடுக்கப்பட்டது என்னுஞ் சந்தோஷ சமாசாரத் தை அரசனிடத்துச்சொல்ல வந்து சேர்ந்தான்.

அந்த இராச்சியத்தை அபகாரஞ்செய்தவன் தன் மகள் சீலியா ஓடிவிட்டதனாற் கோபங்கொண்டும், ஒவ்வொருநாளும் மிகுந்தபணக்காரர்களெல்லாம் ஆர்டன்காட்டிற்குச்சென்று மெய்யான அரசனைச் சேருகிறார்களெனக் கேள்விப்பட்டும், தன் சகோதரனுக்கு வறுமையாயிருக்குங்காலத்திற்கூட மிகுந்த மரியாதை நடப்பதைப்பார்த்து மனம் பொறுதும், அவனையும் அவனைச்சேர்ந்த பலரையும் வாளுக்கு இரையாக்கும் எண்ணத்தோடு ஒருபெரிய சேனைக்குத் தலைவனாய் அக்காட்டிற்குச் சென்றான். ஆனால் சகலரும் ஆச்சரியப்படும்படி கடவுள் நடுநின்றமையால் அவன் அக்கெட்ட எண்ணத்தினின்றும் மாற்றப்பட்டான். ஏனெனில் அவன் காட்டருகில் வரும்பொழுது அவனை ஒருசந்நியாசி சந்திக்க அவனுடன் மிகவும் பேசி அவனால் அக்கெட்ட எண்ணத்தினின்றும் மாற்றப்பட்டனன். அது தொடக்கம் மிக்க துக்கமுடையவனாய்த் தான் அநியாயமாய்ச் சம்பாதித்த இராச்சியங்களைவிட்டுத் தன் வாழ்நாளை ஒருமடத்திற் கழிக்கத் தீர்மானித்தனன். இவ்விதமாகத் துக்கப்பட்டு முதன் முதற்செய்ததுதான் முன் சொல்லியபடிதன் சகோதரனிடந் தூதனுப்பித் தான் அதுவரைக்கும் அபகரித்து வைத்திருந்த இராச்சியத்தைக் கொடுப்பதாகவும், அவனுடைய சிநேகருக்கும், வறுமைக்காலத்து அவனைவிட்டுப் பிரியாது இருந்தபலருக்கும் அவர் அவரது நிலத்தையும் வருமானத்தையுங் கொடுப்பதாகவுஞ் சொல்லியது.

. , டாவராலும் எவ்வளவு எதிர்பார்க்கப்படாதிருந்த தோ அவ்வளவுசந்தோஷம் யாவர்க்கும்உண்டாக்கி ப இச்சமாசாரம் இராஜகுமாரத்திகளின் கலியாண க்கொண்டாட்டத்தை அதிகரிக்கச்செய்யத்தக்க ந லலசமயத்தில் வந்தது. சீலியா ராசலிண்டின் தந் தையாகிய அரசனுக்குவந்த நல்ல அதிஷ்டத்திற்கா கத் தன் சகோதரிக்கு உபசரணைசெய்து அந்த இரா ச்சியத்திற்குத் தான் உருத்திலலாதவளாய் தகப்ப ன்செய்த இதனால் ராசலிண்டே உரித்துள்ளவளா. னபோதினும் மனப்பூர்வமாய் அவள் நல்லாயிருக்க வேண்டுமெனச்சொன்னாள். இவ்விருவருக்கும் இரு ந்த சிநேகம் எரிச்சல் பொறாமை யாதுமிலலாது மி கவுஞ் சிறந்ததாயிருந்தது.

அரசனுக்குத் தான் நாட்டைவிட்டுத் துரத்தப்ப ட்டபொழுது தன்னைவிட்டுநீங்காது நின்ற சிநேகரு க்கு வெகுமதிசெய்ய இப்பொழுது நல்லதருணம் வாய்த்தது. அவர்களும் அரசனுக்கு வறுமைவந்த காலத்து மனப்பொறுதியுடன் அவனிடத்து இருந்த போதினும், இப்பொழுது கலக்கமில்லாத செல்வ ராய்த் தமது அரசனது அர[illegible] விருப்பமுள்ளவாராய் இருந்தா[illegible]

19 மே 198

PRINTED AT THE ALBINION PRESS, MADRAS.